1969 மார்ச் 27]

கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,95,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,27,43,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனை திருப்பிக்கொடுத்தலும்.

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,61,51,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை, இந்தப் பேரவைக்குக் கொண்டு வருவதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுவதற்கும், ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(11) அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, I move—

" That leave be granted for the introduction of The Tamil Nadu Appropriation (No. 4) Bill of 1969."

The motion was put and carried and leave was granted.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் 28-3-1969 அன்று காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.